நெல்லை மாலைமுரசு -22-12-11

# போராடும் இளைஞரை கவுன்சிலராக்கிய பொதுமக்கள்



வே.மனோகர் கவுன்சிலர்.

தூத்துக்குடி மாநகராட்சி 57–வது வார்டு சுயேட்சை கவுன்சிலர் வே.மனோகர் மாவட்ட ஆதித்தமிழர் பேரவை தலைவராக உள்ளார். 3 ஆண்டு மாவட்ட செயலாளராக இருந்து நெல்லை, மதுரை, விருதுநகர், சேலம், கோவை மற்றும் தலைநகர் சென்னை என மாநில முழுவதும் சென்று போராட்ட களம் கண்ட இளைஞர்.

மனித உரிமை மீறலுக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டு சமூக உரிமைக்காக உணர்ச்சிகரமாக குரல் எழுப்பியதன் மூலம் பேரவை தலைவர் ஆதிய மானிடம் பாராட்டை பெற்றுள்ளார். நீல நிற சட்டை மட்டுமே அணிந்து எப்போதும் சமூக சிந்தனையுடன் காணப் பட்டவர். நடை பெற்ற உள்ளாட்சி தேர்தலில் தூத்துக்குடி மாநகராட்சி 57–வது வார்டு மாமன்ற கவுன் சிலர் பதவிக்கு சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இதையடுத்து வாக்காளர் களுக்கு நன்றி தெரிவித்து சுற்று பயணம் மேற்கொண்ட போது 57–வது வார்டு பகுதியில் சுகாதாரமான குப்பையில்லாத பகுதியாகவும், அனைத்து அடிப்படை தேவைகளையும் ஏற்படுத்தி தன்னிறைவு பெற்ற பகுதியாகவும் உருவாக்குவேன் என்று கூறினார்.

அவரை பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வரவேற் றனர்.